Kerala Gazette No. 33 dated 18th August, 2020.
**PART I** **Section iii**

**கேரள அரசு**

சட்ட (சட்டமியற்றல்-இ) துறை

அறிக்கை

எண் 25297/ச. இ. இ. 1/2017/சட்டம்.

2018 ஏப்ரல் 7
திருவனந்தபுரம், 1193 மீனம் 24
1940 சைத்ரம் 17.

2018-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7-ம் தேதி கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்ட பின்வரும் அவசரச்சட்டம் பொதுத்தகவலுக்கென இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது.

ஆளுநரின் ஆணைப்படி,

பி. ஜி. ஹரீந்திரநாத்,
*சட்டத்துறை செயலாளர்.*

2018-ன் அவசரச்சட்டம் எண் 22

## 2018-ன் கேரளா உயர்நீதிமன்ற (திருத்த) அவசரச்சட்டம்

இந்தியக்குடியரசின் அறுபத்தி ஒன்பதாவது ஆண்டில் கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்டது.

1958-ன் கேரள உயர்நீதிமன்ற சட்டத்தை மீண்டும் திருத்தம் செய்வதற்கான ஒரு அவசரச்சட்டம்.

முகவுரை.—2017-ன் கேரள உயர்நீதி மன்ற (திருத்த) அவசரச்சட்டம் (2017-ன் 30) 2017 டிசம்பர் 14-ஆம் தேதி கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்டதாலும்;

2018-ம் ஆண்டு ஜனவரி 22-ஆம் தேதி ஆரம்பித்து 2018 பிப்ரவரி 7-ஆம் தேதி முடிவடைந்த 14-வது கேரள மாநில சட்டப்பேரவையின் கூட்டத்தொடரில் மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்திற்கு பதிலாக ஒரு சட்டம் கொண்டு வருவதற்குரிய ஒரு மசோதாவை 87-ம் எண் மசோதாவாக வெளியிடப்பட்டிருந்தபோதிலும் அதை சட்டப்பேரவையில் தாக்கல் செய்வதற்கும் நிறைவேற்றுவதற்கும் இயலாமல் போனதாலும்;

மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்தின் விதிகளைப் பாதுகாப்பதற்காக, 2018-ன் கேரளா உயர்நீதி மன்ற (திருத்த) அவசரச்சட்டத்தை (2018-ன் 3) 2018-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12-ம் தேதி கேரளா ஆளுநர் விளம்பர அறிக்கை செய்ததாலும்;

2018 பிப்ரவரி 26-ஆம் தேதி ஆரம்பித்து 2018 ஏப்ரல் 4-ஆம் தேதி முடிவடைந்த கேரள மாநில சட்டப்பேரவையின் கூட்டத்தொடரில் மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்திற்கு பதிலாக மாநில சட்டப்பேரவையின் ஒரு சட்டத்தை கொண்டு வருவதற்கான ஒரு மசோதாவை பதிநான்காவது கேரள சட்டப்பேரவையின் 113-வது எண் மசோதாவாக பிரசுரிக்கப்பட்டிருந்தபோதிலும் அதை சட்டப்பேரவையில் தாக்கல் செய்வதற்கும் நிறைவேற்றுவதற்கும் இயலாமல் போனதாலும்;

இந்திய அரசியலமைப்பின் 213-வது விதித்தொகுப்பின் உட்பிரிவு (2)-ன் துணைப்பிரிவு (எ)-ன் படி 2018-ன் கேரளா உயர்நீதிமன்ற (திருத்த) அவசரச்சட்டம் (2018-ன் 3) 2018-ம் ஆண்டு ஏப்ரல் 9-ம் தேதி அமலிலிருந்து நின்று விடுவதாலும்;

மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்தின் விதிமுறைகளை நிலைநிறுத்தாவிடில் இடர்பாடுகள் ஏற்படும் என்பதாலும்;

கேரள மாநில சட்டபேரவை கூட்டத்தொடரில் இல்லாததாலும், தாம் அவசர நடவடிக்கைகள் கைகொள்ள வேண்டிய சூழ்நிலைகள் தற்போதுள்ளன என்று கேரள ஆளுநர் திருப்தியுறுவதாலும்;

தற்போது, அதனால், இந்திய அரசியலமைப்பின் 213-வது சட்ட விதித்தொகுப்பின் உட்பிரிவு (1)-ன் படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி கேரள ஆளுநரால் பின்வரும் அவசரச்சட்டம் விளம்பர அறிக்கை செய்யப்படுகிறது.

1. சுருக்கப்பெயரும் தொடக்கமும்.—(1) இந்த அவசரச்சட்டம் 2018-ன் கேரள உயர்நீதிமன்ற (திருத்த) அவசரச்சட்டம் என அழைக்கப்படலாம்.

(2) இது 2017 டிசம்பர் 15-ம் தேதி அமலுக்கு வந்ததாக கருதப்படவேண்டும்.

2. 1959-ன் 5-ம் சட்டம் தற்காலிகமாக திருத்தம் செய்யப்படல்.—இந்த அவசரச்சட்டம் அமலில் இருக்கும் காலயளவில், 1958-ன் கேரள உயர்நீதிமன்ற சட்டம் (1959-ன் 5-ம் எண்) (இதன் பிறகு முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படும்) பிரிவு 3 மற்றும் பிரிவு 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களுக்கு உட்பட்டு அமலில் இருக்கும்.

3. பிரிவு 3-ல் திருத்தம்.—முதன்மை சட்டத்தின் பிரிவு 3-ன் உட்பிரிவு (13)-ல்,-

(i) துணை உட்பிரிவு (பி)-ல் ‘‘ஒரு இலட்ச ரூபாய்’’ எனும் சொற்களுக்குப் பதிலாக ‘‘நாற்பது இலட்ச ரூபாய்’’ எனும் சொற்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(ii) துணை உட்பிரிவு (ஜி)-க்குப் பிறகு, பின்வரும் துணை உட்பிரிவு சேர்க்கப்பட வேண்டும்.

‘‘(எச்) மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயம் வெளியிட்ட ஒரு ஆணையில்’’

4. நிலுவையிலுள்ள முறையீடு, வழக்குகள் மற்றும் இதர விவகாரங்கள் தொடர்பான சிறப்பு முன் ஏற்பாடுகள்.—முதன்மை சட்டத்தில் அல்லது தற்போது அமலில் உள்ள வேறு ஏதேனும் சட்டம் அல்லது தீர்ப்பு, ஆணை அல்லது நீதிமன்றத்தின் உத்தரவில் என்னதான் கூறப்பட்டிருந்தாலும் இந்த அவசர சட்டத்தின்படி திருத்தம் செய்யப்பட்டுள்ள முதன்மை சட்டத்தின் பிரிவு 3-ன் உட்பிரிவு (13)-ல், துணை உட்பிரிவு (பி), மற்றும் (எச்)-ல் கூறப்பட்டுள்ள விவகாரங்கள் அனைத்து வழக்குகளுக்கும், மேல்முறையீடுகள் மற்றும் பிற விவகாரங்களுக்கும் மற்றும் 1988-ன் (1988-ன் 59-வது மத்திய சட்டம்), மோட்டார் வாகனச் சட்டத்தின்படி நஷ்டஈடு கோருகின்ற விண்ணப்பங்களுக்கும், வழக்குகளுக்கும் ஏற்றபடி, இந்த அவசரச்சட்டம் அமலுக்கு வருகின்ற தேதிக்கு முன்னராக தொடரப்பட்ட மற்றும் தீர்ப்பாணை எதிர்கொள்கின்ற வழக்குகளுக்கும் பொருந்துவதாகும். மேலும் குறிப்பிட்ட தேதியன்று உயர்நீதிமன்ற நீதி ஆயத்தின் முன்னராக முடங்கிக் கிடக்கும் முறையீடுகளில் குறிப்பிட்டுள்ள தொகை அல்லது வழக்குத் தொடரப்பட்ட விஷயத்தின் மதிப்பு அல்லது உட்பட்டுள்ள பிற விவகாரங்கள் நாற்பது இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் இருப்பின் மற்றும் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம் வழங்கிய ஆணையின் மேல் உள்ள அனைத்து முறையீடுகளும் தனி நீதிபதிக்கு மாற்றம் செய்யப்பட்டு பரிசல் செய்யப்படும்.

முதன்மை சட்டத்தின் பிரிவு 5-ன்படி இரு நீதிபதிகள் உள்ளிட்ட அமர்வின் முன் நிலுவையிலுள்ள மேல்முறையீடுகளுக்கு மேற்கூறப்பட்டுள்ள இந்த விதிகள் பொருந்தாது.

5. இரத்தாதலும் தவிர்ப்பும்.—(1) 2018-ன் கேரள உயர்நீதிமன்ற (திருத்த) அவசரச்சட்டம் (2018-ன் 3) இதனால் இரத்து செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு இரத்து செய்யப்பட்ட போதிலும், மேற்கூறிய அவசரச்சட்டத்தின்படி திருத்தம் செய்யப்பட்ட முதன்மைச் சட்டத்தின்படி செய்ததாகவோ அல்லது செய்ததாக கருதப்படுவதோஆன ஏதேனும் காரியம் அல்லது எடுத்ததோ எடுத்தகாகவோக கருதப்படுவதோஆன ஏதேனும் நடவடிக்கையோ இந்த அவசரச்சட்டத்தின்படி செய்ததாகவோ எடுத்ததாகவோ கருதப்பட வேண்டும்.

பி. சதாசிவம்,

ஆளுநர்.